பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 05 2025 7 15

தலைப்புச் செய்திகள்

1. கந்தஹார் விமானக் கடத்தல் மற்றும் புல்வாமா தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் ஆபரேஷன் சிந்தூரில் கொல்லப்பட்டதாக முப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2. பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதிப்பதற்காக சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

3. எல்லைப் பகுதி மாநிலங்களில் உள்ள பொதுமக்கள் யாரும் சந்தேகப்படக்கூடிய பொருட்களை தொட வேண்டாம் என்று தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

4. புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

5. உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்திய அணி 2 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகளைக் குறிவைத்து ஆபரேஷ் சிந்தூர் தொடங்கப்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் முப்படைகளின் தலைமை இயக்குநர்கள் நேற்று மாலை செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் இருந்த 9 தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும், இதில் நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநர் லெப்டினண்ட் ஜெனரல் **Rajiv Ghai** தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் 1999ஆம் ஆண்டு இந்திய விமானம் கந்தஹாருக்கு கடத்தப்பட்டதிலும், புல்வாமா தாக்குதலிலும் ஈடுபட்ட தீவிரவாதிகளான யூசுப் ஆசாத், அப்துல் மாலிக் ரவூஃப் மற்றும் முதஸ்ஸிர் அகமது ஆகியோர் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்த 40 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை மதியம் பாகிஸ்தானின் ராணுவ தலைமை இயக்குநர், இந்திய ராணுவ செயல்பாடுகளுக்கான தலைமை இயக்குநருடன் பேசியதாகவும், இதனையடுத்து எல்லைதாண்டி தாக்குதல் மற்றும் வான்வெளி தாக்குதல் ஆகியவை நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகும் பாகிஸ்தான் ராணுவம் எல்லைதாண்டி அத்துமீறி தாக்குதல் தொடுத்தது என்றும், அதற்கு இந்தியா தரப்பில் இருந்து பதிலடி தரப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இன்று மதியம் 12 மணிக்கு பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாகவும் லெப்டிணன்ட் ஜெனரல் **Rajiv Ghai** கூறினார்.

பாகிஸ்தான் மீண்டும் தாக்குதல் தொடுத்தால் அதற்கு தக்க பதிலடி கொடுக்க இந்திய ராணுவத்திற்கு முழு அதிகாரத்தை ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த சந்திப்பின்போது பேசிய ஏர்மார்ஷல் ஏ.கே. பாரதி, பாகிஸ்தான் விமானங்கள் இந்தியா வான் எல்லைக்குள் ஊடுருவுவது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், சில விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் கூறினார்.

பாகிஸ்தான் மீது வான்வெளித் தாக்குதல் நடத்திய இந்திய விமானப்படை வீரர்கள் அனைவரும் திரும்பிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூரின் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பஹவல்பூர் மற்றும் **Muridke** ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த தாக்குதல் குறித்த வீடியோக்களையும் அவர் வெளியிட்டார்.

அதேநேரத்தில் பாகிஸ்தான் அனுப்பிய ட்ரோன்கள், மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதிகளையும், ராணுவ முகாம்களை நோக்கி ஏவப்பட்டதாகவும், அவை அனைத்தும் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அரபிக் கடலின் வடபகுதியில் இந்திய கடற்படைக் கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக இந்திய கடற்படையின் **Vice Admiral** ஏ.என். பிரமோத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் குறிப்பிட்ட இலக்குகளை தாக்கும் விதத்தில் இந்திய கடற்படை தயார் நிலையில் இருந்ததாகவும், தற்போது நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

எல்லைப் பகுதி மாநிலங்களில் உள்ள பொதுமக்கள் யாரும் சந்தேகப்படக்கூடிய பொருட்களை தொட வேண்டாம் என்று தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பொதுவெளியில் கிடக்கும் வெடிக்கக்கூடிய பொருட்களின் அருகில் செல்ல வேண்டாம் என்றும், அதைத் தொட்டுப் பார்க்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தப் பொருட்கள் சிலசமயம் வெடித்து உயிர்ச்சேதம் ஏற்படலாம் என்பதால் இதன் அருகில் செல்ல வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளது.

மேலும் இப்பொருட்களைக் கண்டால் உடனடியாக உள்ளூர் நிர்வாகத்திடம் தெரிவிக்குமாறு கூறியுள்ளது.

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதிப்பதற்காக சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமனதாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு இசைவு தெரிவித்துள்ளதாகவும், இதையடுத்து நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் விரைவில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கேவும் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

<<<<>>>>

புத்த பூர்ணிமா இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புத்தரின் பிறந்தநாளும், அவர் புத்தகயாவில் ஞானம் பெற்ற தினமும் புத்த பூர்ணிமாவாக கொண்டாடப்படுகிறது.

இந்த தினத்தை உலகம் முழுவதும் உள்ள புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களும், இந்துக்களும் கொண்டாடுகின்றனர்.

இதனையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அகிம்சை, அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றை பகவான் புத்தர் நமக்கு தந்திருப்பதாகவும், அவற்றை பயன்படுத்தி மனிதகுலம் தழைக்க நாம் பாடுபட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சமத்துவம் மற்றும் சமூக நீதி தொடர்பான நமது நம்பிக்கைகளை வலுப்படுத்தும் வகையில், அவரது கோட்பாடுகள் அமைந்திருப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

புத்தரின் கொள்கைகளை பின்பற்றி, அமைதி, நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியை நோக்கி நாடு முன்னேற நாம் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அகிம்சை, அன்பு ஆகியவை இன்றைய உலகிலும் தேவைப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

புத்தரின் போதனைகளைப் பின்பற்றி தனிநபரும், மனித சமூகமும் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

காஸாவில் உயிருடன் உள்ள கடைசி அமெரிக்க பிணையக் கைதி **Edan Alexander**-ஐ விடுவிப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

சண்டைநிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை காஸாவிற்கு வழங்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த விடுவிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

**Edan Alexandre**-ஐ எந்தவித நிபந்தனையும் இன்றி ஹமாஸ் விடுவிக்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்ததாகவும் இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இஸ்ரேல் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட **Witkoff** கட்டமைப்பின் அடிப்படையில் பிணையக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என தெரிவித்துள்ளதாகவும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை எகிப்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Badr Abdelatty** தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவாதித்ததாகவும், எந்தவகையிலான தீவிரவாதத்தையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

இந்தியா – எகிப்து இடையிலான பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்பு அம்சங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த அதிநவீன பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

அதிநவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு இன்னும் சில மாதங்களில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட இருப்பதாக அமைச்சர்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

சர்வதேச செவிலியர் தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

நவீன மருத்துவத்தின் நிறுவனர் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

'நமது செவிலியர்கள், நமது எதிர்காலம், செவிலியர்கள் பாதுகாப்பு, பொருளாதாரத்தில் முன்னேற்றம்' என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.

செவிலியர்களின் அளப்பரிய பணியின் காரணமாக உலகம் முழுவதும் சுகாதார கட்டமைப்புகள் மேம்பட்டு வருகின்றன.

இந்நாளையொட்டி உலக சுகாதார நிறுவனம் செவிலியர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்திய அணி 2 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலம் என 7 பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் **Parth Sushant Salunkhe** வெண்கலப் பதக்கம் வென்றார்.

மகளிர் பிரிவில் தீபிகா குமாரியும் வெண்கலப் பதக்கம் வென்றார்.

-----------

பீஹாரில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியின் 8வது நாளான நேற்று மகாராஷ்டிரா மேலும் ஒரு தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

பதக்கப் பட்டியலில் இதுவரை 28 தங்கங்களுடன் 75 பதக்கங்களைப் பெற்று மகராஷ்டிரா முதல் இடத்தில் உள்ளது.

14 தங்கம் உட்பட மொத்தம் 39 பதக்கங்களுடன் கர்நாடகா இரண்டாவது இடத்திலும், 23 பதக்கங்களுடன் ராஜஸ்தான் 3வது இடத்திலும் உள்ளது.

-------------

மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா 97 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்று கோப்பையை கைப்பற்றியது.

-------------

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் நிருபமா தேவி 115 கிலோ எடைப்பிரிவில் 4வது இடத்தைப் பிடித்தார்.

<<<<>>>>